TEST : 4
CHAPTER :4

# 10 வகுப்பு கணிதம் வடிவியல் by G.Ilavarasu

15 Questions

NAME :

CLASS :

DATE :

1. 6மீ மற்றும் 11மீ உயரமுள்ள இரு கம்பங்கள் சமதள தரையில் செங்குத்தாக உள்ளது.அவற்றின் அடிகளுக்கு இடையே உள்ள தொலைவு 12 மீ எனில் அவற்றின் உச்சிகளுக்கு இடையே உள்ள தொலைவு என்ன?

- a) 14 மீ
- b) 13 மீ
- c) 15 மீ
- d) 12.8 மீ

2. O வை மையமாக உடைய வட்டத்திற்கு,வெளியே உள்ள புள்ளி P யிலிருந்து வரையப்பட்ட தொடுகோடுகள் PA மற்றும் PB ஆகும். $\angle APB = 70^\circ$ எனில், $\angle AOB$ இன் மதிப்பு

- a) $110^\circ$
- b) $100^\circ$
- c) $120^\circ$
- d) $130^\circ$

3. வட்டத்தின் தொடுகோடும் அதன் ஆரமும் செங்குத்தாக அமையும் இடம்

- a) முடிவிலி
- b) தொடு புள்ளி
- c) மையம்
- d) நாண்

4. $\Delta ABC$ யில் ADஆனது, $\angle BAC$ யின் இருசமவெட்டி. AB=8செ.மீ, BD=6 செ.மீ மற்றும் DC=3செ.மீ எனில், பக்கம் AC-யின் நிளம்

- a) 6 செ.மீ
- b) 8 செ.மீ
- c) 4 செ.மீ
- d) 3 செ.மீ

5. இரு வடிவொத்த முக்கோணங்கள் $\Delta ABC$ மற்றும் $\Delta PQR$ இன் சுற்றளவுகள் முறையே 36 செ.மீ மற்றும் 24 செ.மீ ஆகும்.PQ=10 செ.மீ எனில் AB இன் நீளம்

- a) $\frac{10\sqrt{6}}{3}$ செ.மீ
- b) $6\frac{2}{3}$ செ.மீ
- c) $66\frac{2}{3}$ செ.மீ
- d) 15செ.மீ


6. வட்டத்தின் வெளிப்புற புள்ளியிலிருந்து வட்டத்திற்கு எத்தனை தொடுகோடுகள் வரையலாம்

- a) இரண்டு
- b) பூஜ்ஜியம்
- c) முடிவற்ற எண்ணிக்கை
- d) ஒன்று

LIVEWORKSHEETS


7. $\Delta ABC$ இல் $DE \parallel BC$ AB =3.6செ.மீ AC =2.4செ.மீ மற்றும் AD =2.1 செ.மீ எனில், AE இன் நீளம்

- [ ] a) 1.8 செ.மீ
- [ ] b) 1.2 செ.மீ
- [ ] c) 1.05 செ.மீ
- [ ] d) 1.4 செ.மீ

8. 



படத்தில் உள்ளவாறு O வை மையமாகக்கொண்ட வட்டத்தின் தொடுகோடு PR எனில், $\angle POQ$ ஆனது

- [ ] a) $120^\circ$
- [ ] b) $90^\circ$
- [ ] c) $110^\circ$
- [ ] d) $100^\circ$

9. 


கொடுக்கப்பட்ட படத்தில் $ST \parallel QR$ ,PS=2 செ.மீ மற்றும் SQ=3செ.மீ எனில் $\Delta PQR$ இன் பரப்பளவுக்கும் $\Delta PST$ இன் பரப்பளவுக்கும் உள்ள விகிதம்

- [ ] a) 25:11
- [ ] b) 25:4
- [ ] c) 25:13
- [ ] d) 25:7


10. 


கொடுக்கப்பட்ட படத்தில், PR=26 செ.மீ QR=24செ.மீ $\angle PAQ = 90^\circ$ ,PA=6 கொடுக்கப்பட்ட படத்தில், PR=26 செ.மீ QR=24செ.மீ மற்றும் QA=8கொடுக்கப்பட்ட படத்தில், PR=26 செ.மீ QR=24செ.மீ எனில் $\angle PQR$ ஐ காண்க.

- [ ] a) $90^\circ$
- [ ] b) 80 °
- [ ] c) $75^\circ$
- [ ] d) $85^\circ$

11. இரு சமபக்க முக்கோணம் $\Delta ABC$ இல் $\angle C = 90^\circ$ மற்றும் AC=5 செ.மீ,எனில் AB ஆனது

- [ ] a) 5 செ.மீ
- [ ] b) $5\sqrt{2}$ செ.மீ
- [ ] c) 2.5 செ.மீ
- [ ] d) 10 செ.மீ

12. 



படத்தில் O வை மையமாக உடைய வட்டத்தின் தொடுகோடுகள் CP மற்றும் CQ ஆகும்.ARB ஆனது வட்டத்தின் மீது உள்ள புள்ளி R வழியாக செல்லும் மற்றொரு தொடுகோடு ஆகும்.CP=11செ.மீ மற்றும் BC=7செ.மீ ,எனில் BR இன் நீளம்

- [ ] a) 5செ.மீ
- [ ] b) 4செ.மீ
- [ ] c) 8செ.மீ
- [ ] d) 6 செ.மீ

LIVEWORKSHEETS

13. கொடுக்கப்பட்ட படத்தில் $\angle BAC = 90^\circ$ மற்றும் $AD \perp BC$ எனில்

ரில்,




- [ ] a) AB . AC = $AD^2$
- [ ] b) BD . CD = $AD^2$
- [ ] c) BD . CD = $BC^2$
- [ ] d) AB . AC= $BC^2$

14. $\frac{AB}{DE} = \frac{BC}{FD}$ எனில் $\Delta$ ABC மற்றும் $\Delta$ EDF எப்பொழுது வடிவொத்தவையாக அமையும்.

- [ ] a) $\angle A = \angle D$
- [ ] b) $\angle B = \angle D$
- [ ] c) $\angle B$ = $\angle E$
- [ ] d) $\angle A = \angle F$

15. $\Delta LMN$ இல் $\angle L = 60^\circ, \angle M = 50^\circ$ மேலும் $\Delta LMN \sim \Delta PQR$ எனில் $\angle R$ இன் மதிப்பு

- [ ] a) $30^\circ$
- [ ] b) $40^\circ$
- [ ] c) $110^\circ$
- [ ] d) $70^\circ$

LIVEWORKSHEETS